இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1997 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, நியாயமற்ற ஒப்பந்த நியதிகள் சட்டம்

---

(1997, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

---

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1997, ஒக்ரோபர் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 10.25 தபாற் செலவு : ரூபா 4.60

# 1997 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க நியாயமற்ற ஒப்பந்த நியதிகள் சட்டம்

[1997 ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 51/96

**ஒப்பந்தத்தின் மீறுகைக்கு அல்லது கவனயீன்மைக்கு அல்லது வேறு கடமை மீறுகைக்கு ஒப்பந்த நியதிகளின் வாயிலாக அல்லது வேறுவகையில் குடியியல் பொறுப்பை எந்த அளவுக்குத் தவிர்க்கலாமோ அந்த அளவின் மீது வரையறைகளைச் சுமத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, நியாயமற்ற ஒப்பந்த நியதிகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (1) மூன்றாம், 4 ஆம், 5 ஆம் பிரிவுகளிலுள்ள எதுவும் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒப்பந்தமொன்றுக்கு அல்லது அது தொடர்பில் ஏற்புடையதாக மாட்டாது. ஏற்புடைமை.

(2) மூன்றாம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் தொழில் பொறுப்புகளுக்கு மட்டுமே ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் அப்பிரிவுகளில் பொறுப்பைப் பற்றிய குறிப்பீடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

3. (1) பொதுவில் ஆட்களுக்கு அல்லது குறிப்பிட்ட ஆட்களுக்குக் கொடுக்கப்பட்டதும் கவனயீனத்தினின்றெழும் இறப்பிற்கு அல்லது ஆளுக்குரிய ஊறுக்கு ஆளொருவருக்குரிய பொறுப்பை புறநீக்கம் செய்வதாகக் கருதப்படுகின்ற அல்லது புறநீக்கம் செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் பயனை உடைய ஓர் ஒப்பந்த நியதி அல்லது அறிவித்தல் பயனற்றதாதல் வேண்டும். கவனயீனத்திற்கான பொறுப்பைத் தவிர்த்தல்.

(2) பொதுவில் ஆட்களுக்கு குறிப்பிட்ட ஆட்களுக்குக் கொடுக்கப்பட்டதும் கவனயீனத்தினின்றெழும் வேறு ஏதேனும் இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு ஆளொருவரின் பொறுப்பை புறநீக்கம் செய்வதாக அல்லது மட்டுப்படுத்துவதாக கருதப்படுவதுமான அல்லது புறநீக்கம் செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் பயனைக் கொண்டிருப்பதான ஓர் ஒப்பந்த நியதி அல்லது அறிவித்தலானது அத்தகைய ஒப்பந்த நியதி அல்லது அறிவித்தல், நியாயத்தின் தேவைப்பாட்டைத் திருப்திப்படுத்தும் அளவுக்கு மட்டுமே பயனுடையதாதல் வேண்டும்.

2 —I045646 — 1,100 (97/07)

(3) ஓர் ஒப்பந்த நியதி அல்லது அறிவித்தல், கவனயீனத்திற்கான பொறுப்பை புறநீக்கம் செய்வதாக அல்லது மட்டுப்படுத்துவதாகக் கருதப்படுமிடத்து அல்லது புறநீக்கம் செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் பயனைக் கொண்டிருக்குமிடத்து அத்தகைய ஒப்பந்த நியதிக்கு ஆளொருவரின் உடன்பாடு அல்லது அத்தகைய அறிவித்தலைப் பற்றிய அறிவு அதனளவில் ஏதேனும் ஆபத்தை அவர் ஏற்றுக் கொள்வதாய் அமைவதாகக் கொள்ளப்படுதலாகாது.

ஒப்பந்தத்திற்கான பொறுப்பைத் தவிர்த்தல்.

4. (1) திறத்தவர்களுள் ஒருவர் பாவனையாளராக அல்லது மற்ற திறத்தவரின் எழுத்திலான நியம தொழில் நியதிகளின் மீது கையாளுமிடத்து ஒப்பந்தமொன்றிற்கான திறத்தவர்களுக்கிடையிற் போன்று இப்பிரிவு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) (இப்பிரிவில் கூறப்பட்ட விடயங்களுள் எதிலும்) ஒப்பந்த நியதியானது நியாயத் தன்மையின் தேவைப்பாட்டைத் திருப்திப்படுத்தும் அளவுக்குத் தவிர அந்தத் திறத்தவருக்கு எதிராக மற்றத் திறத்தவர் ஏதேனும் ஒப்பந்த நியதியைக் குறிப்பீடு செய்வதன் மூலம் –

(அ) அவரே ஒப்பந்த மீறுகையில் இருக்கும்போது அந்த மீறுகை தொடர்பாக அவருக்குள்ள ஏதேனும் பொறுப்பைப் புறநீக்கம் செய்ய அல்லது மட்டுப்படுத்த முடியாது ; அல்லது

(ஆ) (i) ஒப்பந்தத்தின் கீழ் அவர் புரியவேண்டுமென நியாயமாக எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பொருளளவில் வித்தியாசமான ஒப்பந்தப் புரிகையைச் செய்வதற்கு ; அல்லது

(ii) அவரது ஒப்பந்தக் கடப்பாடு முழுவதும் அல்லது ஏதேனும் பாகம் தொடர்பாக எவ்வித புரிகையையும் செய்யாது விடுவதற்கு

உரித்துடையவராவார் என உரிமைக் கோரிக்கை செய்ய முடியாது.

நியாயமற்ற நட்டோத்திரவாத வாசகங்கள்.

**5.** (1) பாவனையாளராகக் கையாளும் ஆளொருவர் மீது ஒப்பந்தத்தின் கவனயீனத்திற்கு அல்லது மீறுகைக்கு எவரேனும் வேறு ஆளினால் உறப்படக்கூடிய பொறுப்பு தொடர்பில் (ஒப்பந்தத்திற்கு ஒரு திறத்தவராக இருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி) அத்தகைய வேறு ஆளுக்கு நட்டோத்திரவாதமளிப்பதற்கான கடப்பாடு ஒன்றைச் சுமத்துவதாகக் கருதப்படும் ஒப்பந்த நியதியொன்று, அத்தகைய ஒப்பந்த நியதி நியாயத்தன்மையின் தேவைப்பாட்டை திருப்திப்படுத்துகின்ற அளவுக்கு மட்டுமே பயனுடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பு –

(அ) நேரடியாக நட்டோத்திரவாதமளிக்கப்படவுள்ள ஆளுடையதாக இருப்பினுஞ்சரி அல்லது பகரப் பொறுப்பாக அவரால் உறப்பட்டதாயினுஞ்சரி ;

(ஆ) பாவனையாளராக ஈடுபடும் ஆளுக்காயினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளுக்காயினுஞ்சரி,

இப்பிரிவு ஏற்புடையதாதல் வேண்டும்.

## விளக்கம்

'அ' என்பவன் ஒரு தோணிச் சொந்தக்காரன். இவன் 'ஆ' என்பவனின் காரைத் தோணியில் ஏற்றிச் செல்வதற்கு 'ஆ' வுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்கின்றான்.

'அ' என்பவனுடைய தோணி வேலையாட்கள் காரை கவனயீனமாகக் கையாள்வதன் விளைவாக மூன்றாம் திறத்தவர்களுக்கு ஏற்படக்கூடிய சேதத்திற்கெதிராக 'ஆ' என்பவன் 'அ' என்பவனுக்கு நட்டோத்திரவாதமளிக்க வேண்டும் என்பது ஒப்பந்தங்களின் நியதிகளுள் ஒன்றாகும்.

நியாயத் தன்மையின் சோதனையை அது திருப்திப்படுத்தினால் மட்டுமே நியதி செல்லுபடியாகும்.

உத்தரவாதங்கள்.

6. (1) தனிப்பட்ட பாவனைக்காக அல்லது நுகர்வுக்காக சாதாரணமாக விநியோகிக்கப்படும் பொருட்களின் விடயத்தில் –

(அ) பாவனையாளரின் பாவனையிலிருக்கும்போது பழுதுடையதாக எண்பிக்கப்படும் பொருட்களினின்றெழுகின்றதும் ; அத்துடன்

(ஆ) பொருட்களின் உற்பத்தியில் அல்லது விநியோகத்தில் அக்கறையுடைய ஆளொருவரின் கவனயீனத்தினின்றெழுகின்றதுமான

ஏதேனும் இழப்பிற்கான அல்லது சேதத்திற்கான பொறுப்பை புறநீக்கம் செய்வதாக அல்லது மட்டுப்படுத்துவதாகக் கருதப்படுகின்ற அல்லது புறநீக்கம் செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் பயனுடைய பொருட்களின் உத்தரவாதமொன்றின் ஓர் ஒப்பந்த நியதி அல்லது அதில் அடங்கியுள்ள அல்லது அதனைப் பற்றிய குறிப்பீட்டால் நடைமுறையிலிருக்கும் அறிவித்தல் பயனுடையதாதலாகாது.

(2) இப்பிரிவில் –

"பாவனையாளரின் பாவனை" என்பது பொருட்கள் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது புறநீங்கலாக தொழில் நோக்கங்களுக்காக அல்லாமல் வேறுவகையில் பாவனை ஒன்று அல்லது பாவனைக்காக உடைமையில் வைத்திருத்தல் என்று பொருள்படும்.

"உத்தரவாதம்" என்பது, எத்தன்மையதான சொற்பிரயோகத்தைக் கொண்டிருந்தபோதிலும் பழுதுகள் முழுமையான அல்லது பகுதியளவிலான மாற்றீட்டின் மூலம் அல்லது பழுதுபார்த்தலினால், பணம் சார்ந்த நட்டஈட்டினால் அல்லது வேறுவகையில் ஈடுசெய்யப்படும் என்ற வாக்குறுதியை அல்லது உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்ற ஓர் எழுத்துப்படிவம் என்று பொருள்படும் ;

விற்பனையும் தவணைக் கொள்வனவும்.

7. (1) (அ) பொருட்களின் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவிலிருந்து ;

(ஆ) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவிலிருந்து,

எழுகின்றதான கடப்பாடுகளின் பொறுப்பை புறநீக்கம் செய்வதாக அல்லது மட்டுப்படுத்துவதாகக் கருதப்படுகின்ற அல்லது புறநீக்கம் செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் பயனையுடைய ஒப்பந்த நியதியொன்று பயனுடையதாதலாகாது.

(2) (அ) பொருட்களின் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் 14 ஆம், 15 ஆம் அல்லது 16 ஆம் பிரிவுகளிலிருந்து;

(ஆ) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தின் 4(2) ஆம், 4(3) ஆம், 4(4) ஆம் அல்லது 4(5) ஆம் பிரிவுகளிலிருந்து

எழுகின்ற கடப்பாடுகளின் மீறுகைக்கான பொறுப்பை பாவனையாளராக வாணிக நடவடிக்கையில் ஈடுபடும் ஆளொருவருக்கெதிராக புறநீக்கம் செய்வதாக அல்லது மட்டுப்படுத்துவதாகக் கருதப்படுகின்ற அல்லது புறநீக்கம் செய்கின்றதான அல்லது மட்டுப்படுத்துகின்றதான பயனுடைய ஒப்பந்த நியதியொன்று பயனுடையதாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏற்பாடுகளுள் எவற்றிலிருந்தும் எழுகின்ற கடப்பாடுகளின் மீறுகைக்கான பொறுப்பை பாவனையாளராக அல்லாமல் வேறுவகையில் கையாளும் ஆளொருவருக்கு எதிராக புறநீக்கம் செய்வதாக அல்லது மட்டுப்படுத்துவதாகக் கருதப்படுகின்ற அல்லது புறநீக்கம் செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் பயனை உடைய ஒப்பந்த நியதியொன்று, அது நியாயத் தன்மையைத் திருப்திப்படுத்துகின்ற அளவுக்கு மட்டுமே பயனுடையதாதல் வேண்டும்.

மீறுகையின் பயன்.

8. (1) ஒப்பந்த நியதியொன்று நியாயத்தன்மையின் தேவைப் பாட்டை அது திருப்திப்படுத்தினால் மட்டுமே, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பயனுடையதாக இருக்குமிடத்து, அவ்வொப் பந்தம் மீறுகையினாலாயினுஞ்சரி, ஏற்க மறுக்கப்பட்டதாக அதனைக் கருதமுற்படும் திறத்தவரொருவராலாயினுஞ்சரி, முடிவுறுத்தப்பட்டுள்ளது என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் அது அத்தேவைப்பாட்டைத் திருப்திப்படுத்துவதாகக் கருதப் படலாம் என்பதுடன் பயனுறுத்தவும்படலாம்.

(2) ஒப்பந்தமொன்று, ஏற்க மறுக்கப்பட்டதாக அதனைக் கருத உரித்துடைய ஆளொருவரால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய உறுதிப்படுத்துகையானது, ஏதேனும் ஒப்பந்த நியதி தொடர்பில் நியாயத் தன்மையின் தேவைப்பாட்டை புறநீக்கம் செய்வதாகக் கருதப்படுதலாகாது.

இரண்டாம் நிலை ஒப்பந்தத்தின் வாயிலாக தட்டிக் கழித்தல்.

**9.** ஒப்பந்தமொன்றிற்கான திறத்தவரொருவரின் உரிமைகளை அதாவது, அவர் ஒரு திறத்தவராக இருக்கும் வேறொரு ஒப்பந்தத்தின் கீழ் அல்லது அதன் நிறைவேற்றுகை தொடர்பில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளால், வேறோர் ஆளுக்குள்ள பொறுப்பை புறநீக்கம் செய்வதிலிருந்து அல்லது மட்டுப்படுத்துவதிலிருந்து தடுக்கப்பட்ட ஆள் வேறோர் ஆளுக்குள்ள அப்பொறுப்பை வலியுறுத்துவது தொடர்பிலான உரிமைகளைப் பாதிக்கின்றதாக அல்லது பறித்து விடுவதாகக் கருதப்படும் அத்தகைய ஒப்பந்தநியதியொன்று பயனுடையதாதலாகாது.

நியாயத்தன்மை பற்றிய சோதனை.

**10.** (1) இச்சட்டத்தின்கீழ் நியாயத்தன்மையின் தேவைப்பாட்டைத் திருப்திப்படுத்துமளவுக்கு மட்டுமே பயனுறுதியுள்ள ஒப்பந்த நியதியொன்று, ஒப்பந்தம் செய்யப்படும்போது திறத்தவர்களின் சிந்தனையில் இருந்த அல்லது நியாயமாக அறிந்திருக்கப்பட்டிருக்க வேண்டிய சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு உள்ளடக்கப்படுவதற்கு ஒப்பந்த நியதி செவ்வையானதும் நியாயமானதாகவும் இருப்பின், அத்தேவைப்பாட்டைத் திருப்திப்படுத்துகின்றது.

(2) ஏழாம் பிரிவில் நோக்கங்களுக்கு ஒப்பந்தமொன்று நியாயத்தன்மையின் தேவைப்பாட்டை திருப்திப்படுத்துகின்றதா எனத் தீர்மானிக்கையில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள விடயங்கள் 1 ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றிக் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவிலுள்ள எதுவும், ஏதேனும் சட்டவிதிக்கு இணங்க, ஏதேனும் இயைபான பொறுப்பை புறநீக்கம் செய்வதாக அல்லது மட்டுப்படுத்துவதாகக் கருதப்படும் நியதியொன்று, அந்த ஒப்பந்தத்தின் நியதியொன்றல்ல என முடிவுகட்டுதலில் இருந்து நீதிமன்றமொன்றை அல்லது நடுத்தீர்ப்பாளர் ஒருவரைத் தடைசெய்தலாகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் நியாயத்தன்மையின் தேவைப்பாட்டைத் திருப்திப்படுத்துகின்றவரை மட்டுமே பயனுறுதியுள்ள அறிவித்தலொன்று (ஒப்பந்தப் பயனுள்ள ஓர் அறிவித்தலல்ல), பொறுப்பு ஏற்பட்டபோது அல்லது ஏற்பட்டிருக்கக்கூடியபோது பெறப்பட்ட எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அதில் தங்கியிருத்தலை அனுமதித்தல் செவ்வையானதும் நியாயமானதுமாயின் அத்தேவைப்பாட்டைத் திருப்திப்படுத்துகின்றது.

(4) ஓர் ஒப்பந்த நியதி அல்லது அறிவித்தல் தொடர்பாக ஆளொருவர் அவரது பொறுப்பை குறித்துரைக்கப்பட்ட ஒரு பணத்தொகைக்கு மட்டுப்படுத்துவதாகக் கருதப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய நியதி அல்லது அறிவித்தல் நியாயத் தன்மையின் தேவைப்பாட்டைத் திருப்திப்படுத்துகின்றதா என்ற வினா எழுமிடத்தும் —

(அ) பொறுப்பு ஏற்படின் அதனை நிறைவேற்றும் நோக்கத்திற்கு தமக்கிருக்க வேண்டுமென அத்தகைய ஆள் எதிர்பார்க்கக்கூடிய வளங்களும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆளுக்கு அது காப்புறுதியின் மூலம் அவரை காப்பதற்கு அது எவ்வளவு தூரம் வழிகோலுகின்றது என்பதும்

— கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) ஓர் ஒப்பந்த நியதி அல்லது அறிவித்தல் நியாயத் தன்மையைத் திருப்திப்படுத்துகின்றது என்பதைக் காண்பிப்பது அது திருப்திப்படுத்துகின்றது என உரிமைகோருபவரைச் சார்ந்தது.

**விதிவிலக்கு வாசகங்களின் நீட்சி.**

11. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏதேனும் பொறுப்பை புறநீக்கம் செய்வதனை அல்லது மட்டுப்படுத்துவதை தடைசெய்யும் அளவுக்கு —

(அ) ஏதேனும் பொறுப்பை உருவாக்குவதையும் அல்லது வரையறுக்கும் தன்மையுள்ள அல்லது மிகு பொறுப்பான நிபந்தனைகளுக்கு அமைய அதனை வலுவுறுத்துவதையும் ;

(ஆ) பொறுப்புத் தொடர்பில் எவையேனும் உரிமைகளை அல்லது நிவாரணத்தை புறநீக்கம் செய்வதையும் அல்லது மட்டுப்படுத்துவதனையும் அல்லது ஆளெவரும் ஏதேனும் அத்தகைய உரிமையை அல்லது நிவாரணத்தை அவர் பின்பற்றுவதன் விளைவாக ஏதேனும் பாதிப்புக்கு உட்படுத்தப்படுவதையும் ; அத்துடன்

(இ) சான்று விதிகளை அல்லது நடவடிக்கை முறையைப் புறநீக்கம் செய்வதனையும் அல்லது வரையறுப்பதையும்

தடைசெய்கின்றது ; அத்துடன் அதே அளவுக்கு 3 ஆம், 6 ஆம், 7ஆம் பிரிவுகளும் இயைபான கடப்பாட்டை அல்லது கடமையை புறநீக்கம் செய்வதாகக் கருதப்படும் நியதி நிபந்தனைகளைத் தொடர்புறுத்தி பொறுப்பு நீக்கம் செய்யப்படுவதையும் அல்லது வரையறுக்கப்படுவதையும் தடைசெய்கின்றது :

ஆயினும், வருங்கால கருத்துவேறுபாடுகளை நடுத்தீர்ப்பிற்கு சமர்ப்பிப்பதற்காக எழுத்திலுள்ள உடன்படிக்கையொன்று, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அத்தகைய பொறுப்பை புறநீக்கம் செய்வதாக அல்லது வரையறுப்பதாகக் கொள்ளப்படுதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

13. (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"தொழில்" என்பது உயர்தொழில் ஒன்றையும் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின், உள்ளூர் அதிகார சபையின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கும் ;

"தொழில்" பொறுப்பு என்பது –

(அ) ஆளொருவரால் (அவரது சொந்தத் தொழிலாயினுஞ்சரி வேறொருவருடையதாயினுஞ்சரி) ஒரு தொழில் நெறியின்போது செய்யப்படவுள்ள விடயங்களில் இருந்து ; அத்துடன்

(ஆ) இருப்பாட்சியாளரின் தொழில் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் வளவுகளின் இருப்பாட்சியிலிருந்து

எழுகின்ற கடப்பாடுகளின் அல்லது கடமைகளின் மீறுகைக்கான பொறுப்பு என்று பொருள்படும்';

"பொருட்கள்" என்பது பொருட்களின் விற்பனைக் கட்டளைச்சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை" என்பது 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

"கவனயீனம்" என்பது –

(அ) ஒப்பந்தத்தை நிறைவேற்றுகையில் நியாயமான கவனமெடுக்குமாறு அல்லது நியாயமான திறமையைப் பிரயோகிக்குமாறு ஒப்பந்தத்தின் வெளிப்படையான அல்லது உடகிடையான நியதிகளிலிருந்து எழுகின்ற ஏதேனும் கடப்பாட்டின் மீறுகை ; அத்துடன்

(ஆ) நியாயமான கவனம் எடுக்கவேண்டிய அல்லது நியாயமான திறமையைப் பிரயோகிக்க வேண்டிய ஏதேனும் பொதுக்கூட்டத்தின் கடமை மீறுகை.

"அறிவித்தல்" என்பது எழுத்திலாயினுஞ்சரி எழுத்திலில்லா விடினுஞ்சரி அறிவிப்பு ஒன்றையும், வேறேதேனும் தொடர்பு கொள்ளுதலையும் உள்ளடக்கும்.

"ஆளுக்குரிய ஊறு" என்பது ஏதேனும் நோயையும், ஆளொருவரின் உடல் அல்லது உளநிலையிலான குறைபாட்டையும் உள்ளடக்கும்.

(2) ஒப்பந்தமொன்றுக்கான திறத்தவரொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் வேறொரு திறத்தவர் தொடர்பில் "பாவனை யாளராகக் கையாளுகிறார்".

(அ) அவர் தொழிலின் போது ஒப்பந்தத்தைச் செய்யாது விடின் அல்லது அவ்வாறு கையாளுவதாகத் தன்னைக் காண்பித்தால் ; அத்துடன்

(ஆ) தொழிலின்போது வேறொரு திறத்தவர் ஒப்பந்தத்தை உருவாக்கும்பொழுது ; அத்துடன்

(இ) பொருட்கள் விற்பனைச் சட்டத்தினால் அல்லது வாடகைக் கொள்வனவுச் சட்டத்தினால் ஆளப்படும் ஒப்பந்தம் ஒன்றின் விடயத்தில், ஒப்பந்தத்தின்கீழ் அல்லது அதனைத் தொடர்ந்து கைமாறுகின்ற பொருட்கள், தனிப்பட்ட பாவனைக்காக அல்லது நுகர்வுக்காக சாதாரணமாக வழங்கப்படுகின்ற விதத்தில் இருப்பின் –

(3) ஏலத்தின் மூலம் அல்லது போட்டி ரீதியிலான கேள்விப்பத்திரத்தின் மூலமான விற்பனை ஒன்றின்மீது விற்போன் எந்தச் சந்தர்ப்பத்திலும் பாவனையாளராகக் கையாள்வதாக கருதப்படுதலாகாது.

(4) திறத்தவர் ஒருவர், பாவனையாளராகக் கையாளவில்லை எனக் காண்பிப்பது, கையாளவில்லையென உரிமைகோரும் ஆளின் பொறுப்பாகும்.

முதலாம் அட்டவணை (பிரிவு 2(1))

ஏதேனும் காப்புறுதி ஒப்பந்தம்

ஏதேனும் ஒப்பந்தம், அது காணியில் அக்கறையொன்றினை உருவாக்குதலை, அல்லது அறுதி மாற்றத்தை அல்லது அத்தகைய ஏதேனும் அக்கறையை முடிவுறுத்துதலைத் தொடர்புறுத்துகின்ற வரையில்.

ஏதேனும் ஒப்பந்தம், அது ஏதேனும் ஆக்கவுரிமையில், வியாபாரச் சின்னத்தில், கைத்தொழில் வடிவமைப்பில் அல்லது வேறு ஏதேனும் புலமைச் சொத்தில் ஓர் உரிமை அல்லது அக்கறை உருவாக்கப்படுதலை அல்லது அறுதிமாற்றம் செய்யப்படுதலை அல்லது அத்தகைய ஏதேனும் உரிமை அல்லது அறுதிமாற்றம் முடிவுறுத்துதலை தொடர்புறுத்துகின்ற வரையில்.

ஏதேனும் ஒப்பந்தம், அது –

(அ) ஒரு கம்பனி அல்லது பங்காண்மை உருவாக்கப்படுதலை அல்லது கலைக்கப்படுதலை, அல்லது

(ஆ) அதன் உறுப்பினர்களின் அல்லது பங்காளர்களின் அமைப்பை அல்லது உரிமைகளை அல்லது கடப்பாடுகளை

தொடர்புறுத்துகின்ற வரையில.

ஏதேனும் ஒப்பந்தம் அது, பிணைப்பொறுப்புகள் உருவாக்கப்படுதலை அல்லது அறுதி மாற்றம் செய்யப்படுதலை அல்லது பிணைப்பொறுப்புகளில் ஏதேனும் உரிமையை அல்லது அக்கறையை தொடர்புறுத்துகின்றவரையில்.

## 1997 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க நியாயமற்ற 11 ஒப்பந்த நியதிகள் சட்டம்

### இரண்டாம் அட்டவணை

### நியாயத்தன்மை பற்றிய சோதனையைப் பிரயோகிப்பதற்கான வழிகாட்டிகள்

7 ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு குறிப்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் இயைபானவையாகத் தோன்றும் பின்வருவனவற்றுள் எவையேனும் விடயங்களாகும் —

(அ) (ஏனைய விடயங்களுடன்) எந்த மாற்று வழிமுறைகளினால் வாடிக்கையாளரின் தேவைப்பாடுகளை நிறைவேற்றி இருக்கக்கூடுமோ அந்த மாற்று வழிமுறைகளைக் கருத்திற் கொண்டு ஒருவரொருவருடன் தொடர்புடைய திறத்தவர்களின் பேரம்பேசும் நிலைமைகளின் வலிமை ;

(ஆ) வாடிக்கையாளர் நியதிக்கு உடன்படுவதற்கு ஊக்குவிப்பு ஒன்றைப் பெற்றாரா அல்லது வேறு ஆட்களுடன் ஆனால் இதனையொத்த நியதியை ஏற்கவேண்டியவராக இல்லாமல் இதனையொத்த ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளும் வாய்ப்பு அவருக்கு இருந்ததா என்பது ;

(இ) ஏனைய விடயங்களுடன் வியாபாரத்தின் ஏதேனும் மரபையும் திறத்தவர்களுக்கிடையில் எவையேனும் முன்னைய வாணிக நடவடிக்கையின் நெறிமுறையைக் கருத்திற்கொண்டு, நியதி இருந்ததையும் அதன் அளவையும் வாடிக்கையாளர் அறிந்திருந்தாரா அல்லது நியாயமாக அறிந்திருக்க வேண்டியவராக இருந்தாரா என்பது ;

(ஈ) ஏதேனும் நியதி இணங்கியொழுகப்படாவிடில் நியதியானது ஏதேனும் இயைபான பொறுப்பை புறநீக்கம் செய்யுமிடத்து அல்லது மட்டுப்படுத்துமிடத்து ஒப்பந்தத்தின் நேரத்தில் நிபந்தனைக்கு இணங்கியொழுகுதல் சாத்தியமாகும் என எதிர்பார்த்தல் நியாயமானதாக இருந்ததா என்பது ;

(உ) பொருட்கள் வாடிக்கையாளரின் விசேடத் தேவைக்கட்டளைக்காக உற்பத்தி செய்யப்பட்டனவா, முறைப்படுத்தப்பட்டனவா அல்லது சீரமைக்கப்பட்டனவா என்பது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.